Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ புரட்டாதி மீ 22 உ திங்கட்கிழமை (08 - 10 - 1990) ஹிஜ்ரீ 1411 ரபி. அப். 18 ஓசை 233

### பிறப்புப் பதிவுகள் நடைபெறுகின்றன

(கொழும்புத்துறை)

கடந்த யூன்மாதம் பதினோராம் திகதிக்குப் பின்னர் யாழ். அரசினர் வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளின் பிறப்புப் பதிவு வேலைகள் யாவும் தற்சமயம் அரியாலை ''சிவசக்தி வைத்திய நிலையம்'' இல. 327, கண்டி வீதி, புங்கன்குளம் சந்தி என்ற விலாசத்தில் செயற்பட்டு வருகின்றது. தற்போது மானிப்பாயில்செயற்பட்டுவரும் யாழ். (4ஆம் பக்கம் பார்க்க)

# "தமிழ்நாட்டு மக்கள் புலிகளை முழுதாக ஆதரிக்க வேண்டும்"

## அ. இ. அ. தி. மு. க. செயலாளர் ஜெயலலிதா வேண்டுகோள்

(சென்னை)

சிறிலங்கா அரசை எதிர்த்துப் பெரும் போரில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டால் இலங்கைத்தமிழ் இனமே அழிக்கப்பட்டுவிடும். விடுதலைப்புலிகளுக்குக் கிடைக்கும் வெற்றியே இலங்கைத் தமிழரின் வெற்றியாகும். ஆகவே தற்போதுள்ள நிலையில் தமிழக மக்களுக்கும், அரசுக்கும் உள்ள ஒரேஒருவழி விடுதலைப் புலிகளை ஆதரிப்பதுதான் என அ. இ. அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா அறிக்கை ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தமிழர் பிரச்சினையில்வி.பி.சிங்அரசு திருப்திகரமாகச்செயற்படவில்லை. பிரதமர் இந்தவிடயத்தில் இதுவரை எந்தவோர் உருப்படியான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இலங்கையில்நடக்கும் விடயங்களை கண்டுகொள்வதில்லை. தமிழக முதலமைச்சர் கருணாநிதி இந்தப் பிரச்சினையைக் கவனித்துக்கொள்வார் என்று பிரதமர் கூறுகிறார். அதைப் போலவே தமிழக மக்களும் இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கருணாநிதி கவனித்துக் கொள்வார் என்றே நம்புகின்றனர்.

விடுதலைப் புலிகளைப் பற் (4ஆம் பக்கம் பார்க்க)

### கரம்பனில் இராணுவம் வீடுடைத்துக் கொள்ளை

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டிருக்கும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் வெள்ளிக்கிழமை (5ஆம் திகதி) கரம்பன் பகுதிக்கு வந்து அங்குள்ள வீடுகளை உடைத்து நகைகள் மற்றும் பெறுமதியான பொருட்களை கொள்ளை அடித்துச் சென்றனர்.

அதிகாலை முதல் பிற்பகல் வரை பிரஸ்தாப இடத்தில் நின்று அட்டகாசம் புரிந்த இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டுப் போகும் போது (4ஆம் பக்கம் பார்க்க)

### தாயகத்தை அங்கீகரித்து பேச்சுவார்த்தை நடத்தவும்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாண தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. நாகேந்திரநாத் ஜா பிரேமதாசா அரசாங்க

இந்தியத் தூதுவர் ஜா

த்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழர்களின் தாயகக்கோட்பாட்டை அங்கீகரித்து தன்னாட்சி வழங்குவதற்கு இண (4ஆம் பக்கம் பார்க்க)

### ஊர்காவற்றுறைப்பகுதியில் 325 மிதிவெடிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கரம்பன், தம்பாட்டி ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் வைத்துச்சென்ற பெருந்தொகையான மிதிவெடிகளை விடுதலைப் புலிகள் மீட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கரம்பனில் 30 மிதிவெடி (4ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் பிக்குகளின் நடமாட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை நகரில் பௌத்த பிக்குமாரின் நடமாட்டம் வெகுவாக அதிகரித்து விட்டது. நகரின் பல பகுதிகளிலும் உள்ள சிறு சிறு அரசமரங்களைச் சூழவுள்ள கடை கட்டடங்களும் தமிழ் மக்களின் வீடுகளும் 'மோட்டார் இரேட்டர்' போட்டு அழிக்கப்பட்டு வருவதாக அண்மையில் திருக்கோணமலையிலிருந்து கொழும்பு சென்று, அங்கிருந்து யாழ்நகர் திரும்பிய அரச உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### அகதிகள் படகு கவிழ்ந்ததில் பதினேழுபேர் மரணம்

(சென்னை)

இலங்கையிலிருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று இராமேஸ்வரம் அருகே கவிழ்ந்தது. இப்படகில் பயணம்செய்த சுமார் 25 பேரில் 17 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் ஆறு பேர் பெண்கள். ஏழு பேர் குழந்தைகள். இரு படகோட்டிகளும் பலியானவர்களில் அடங்குவர்.

நேற்று முன்தினம் வல்வெட்டித்துறைப் பகுதியிலிருந்து புறப்பட்ட இரு படகுகளில் ஒன்றே கடலில் மூழ்கியதாகத் தெரிகிறது. இப்படகு இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் அலக்கழிக்கப்பட்டதாகவும், பின்னர் கடல்நீர் (4ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் கண்ணிவெடி; பல இராணுவத்தினர் பலி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிய பல சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று வங்காலை இராணுவ முகாமில் இருந்து தள்ளாடி இராணுவமுகாமிற்கு (4ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைக்கு யாழ். இருந்து மருத்துவக்குழு சென்றது

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்றுக்காலைசர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் மருத்துவக்குழு ஒன்று முல்லைத்தீவுக்குச் சென்றுள்ளது.

இரண்டு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தையும் சேர்ந்த உறுப்பினர்களுடன் 10 பேர் கொண்ட வைத்தியக்குழுவும் சென்றுள்ளது.

இவர்கள் முல்லைத்தீவில் மலேரியா தடுப்பூசி, கர்ப்பிணித்தாய்மார்களுக்கான ஊசிகள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி முதலிய மருந்து வகைகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

### இராணுவ நடவடிக்கையால் மத்திய கல்லூரிக்கு 20 மில். நட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா முப்படைகளின் தாக்குதல்களால் சேதமடைந்த கட்டடங்கள், தளபாடங்கள், நூலக புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள், மின்சாதனப் பொருட்கள் என எல்லாமாக இருபது மில்லியன் ரூபாவுக்குமேல் பெறுமதியான பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளதாக யாழ். மத்திய கல்லூரி அதிபர் கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இவ்வழிவு பற்றிக்கூறுகையில், குண்டுவீச்சுக்களால் அழிந்த இந்தக்கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்கு மட்டும் எமக்கு உடனடியாக ஒருலட்சம் ரூபா தேவை எனவும் கடந்த 1987ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களா (4ஆம் பக்கம் பார்க்க)

### பிறீமாத் தொழிற்சாலைக்கு 400 சிங்களவர்கள் தெரிவு

(வடமராட்சி கிழக்கு)

திருமலை பிறீமா மாத் தொழிற்சாலையில் கடமையாற்றிய 400 தமிழர்களுக்குப் பதிலாக, சிங்களவர்கள் 400 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

திருமலை பிறீமாத்தொழிற்சாலையில் 1500 இலங்கையர்கள் தொழில் புரிந்து வந்தார்கள்.

இவர்களில் 1000 பேர் சிங்களவராகவும். 500 பேர் தமிழர்களாகவும் இருந்து வந்தார்கள்.

அண்மையில் நெருக்கடியான சூழ் நிலையையடுத்து, 400 (4ஆம் பக்கம் பார்க்க)

### பதின்மூன்றாம் கோலனியில் புலிகளால் ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பதின்மூன்றாம் கொலனி என்ற இடத்தில் அனாதரவாக இருந்த வீடு ஒன்றை சோதனையிட்ட விடுதலைப்புலிகள் பல ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இவ் வீட்டைத் தீவிரசோதனையிட்டபோது ஏ. கே. 47 துப் (4 ஆம் பக்கம் பார்க்க)

### விளம்பரம்

**டில்கா வாச் வேக்ஸ்**
**(Dilka Watch Works)**

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B–1444)

## தவறி விட்டது

வேலணைகிழக்கு வேலணையைச் சேர்ந்த கோபால பிள்ளை சுதேஸ்குமார் என்பவருடைய அடையாளஅட்டை (662951293 V) தவறிவிட்டது கண்டெடுத்தவர் கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் நியூஸ்ரீ கண்ணன் ஸ்ரோர் இல 25, நவீன சந்தைக் கட்டிடம் பலாலிறோட், திருநெல்வேலி.

(R / 709)

## மக்களின் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த மூன்று நாட்களாக நிவாரணப் பொருட்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

அவ்வூரில் உள்ள சில இளைஞர்களின் முயற்சியினால் துரித சதியில் இப்பொருட்கள் வழங்கப்படுவதாக அவ்வூர் மக்கள் பெரிதும் பாராட்டினர்.

## நியூ வீனஸ்
## NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்கோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்றொனிக் கடிகாரங்களின் பற்றரிசளும் விற்பனைக்குண்டு.

(B/1470)

## முறைப்படி விண்ணப்பிக்கவும்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதிகளிலுள்ள இணக்க மன்றுகளுக்கான மேன்முறையீட்டு மன்றுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மன்றுகளில் முறையீடு செய்ய உள்ளோர் அவ்வப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு மன்றுகளில் முறைப்படி விண்ணப்பம் செய்யுமாறு மேற்படி இணக்க மன்றுகளின் பொறுப்பாளர் அரசண்ணா தெரிவித்தார். (18)

## அடையாள அட்டை

கோப்பாய் வடக்கை வதிவிடமாகக் கொண்ட மயிலு இரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## போர்க்கால முதலுதவி மையம்

(தெல்லிப்பழை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள முன்னணியின் புன்னாலைக்கட்டுவன் பிரதேசப் பொறுப்பாளர் பிரிவிலடங்கும் குப்பிளான் கிராமத்தில் போர்க்காலமுதலுதவிமையம் ஒன்று மரணித்த போராளி வினோதனின் தாயார்திருமதி பவளம் மார்க்கண்டுவினால் திறந்து வைக்சப்பட்டது.

இந்த முதலுதவிமையத்தில் ஐம்பதிற்குபேற்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு முதலுதவி வகுப்புக்கள் பயிற்சிகள் நடாத்தப்படுவதுடன்இப்பிரதேசத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சைகளும்வழங்கப்படுகின்றது.

புன்னாலைக்கட்டுவன் பிரதேசப் பொறுப்பாளர் திரு. கதிரவன் இம்முதலுதவி மையம் சிறப்புடன் செயற்பட வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்

## கௌரி விரதம்

மானிப்பாய் சோதிவேம்படி ஸ்ரீ காளி அம்மன் கோயிலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கேதார கௌரி விரத நிறைவு நாளான 18ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு விசேட பூசையும் அர்ச்சனையும் இடம் பெறும். இந்த நோன்பு அனுஷ்டிக்கும் அடியார்கள் அனைவரும் கோயில் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டுநோன்புக் கயிற்றை பெற்றுக் கொள்ளலாம் சங்குவேலி வீ. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் விசேடபூசைகள் நடைபெறும்

## வெற்றிக் கொண்டாட்டம்

(வடமராட்சி)

கோட்டை முகாமை விடுதலைப்புலிகள் கைப்பற்றிய வெற்றிக் களிப்பில் கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையத்தினர் காவடிகள், கரகங்கள் எடுத்து மகிழ்ச்சி பொங்க ஆர்ப்பாரித்தனர். இவ்வெற்றிக் களிப்பில் ஆண்களும் பெண்களும் ஈடுட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆண்டு 5 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களின் கவனத்திற்கு

ஆண்டு 5 தொடங்கி ஆண்டு 11 வரையிலான வகுப்புக்களில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் 9-10-90 பிற்பகல் 3-00 மணிக்கு தவறாது சமுகமளிக்கவும்

UNIVERSAL FOR GOD AND COUNTRY

**யூனிவேர்சல்**
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(B– 1452)

## றாஜு ஸ்ரோர்ஸ்

யாழ் 67, 69, கஸ்தூரியார் றோட்டில் அமைந்த எமது ஸ்தாபனம் ஒரு பகுதி நல்லூர் கந்தன் முன்பாக பொது மக்கள் நன்மை கருதி இயங்குகின்றது. வேறு கிளைகள் வேறு எப்பகுதியிலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

(B. 1446)

## 45 ஆம் நாள் வீர அஞ்சலி



**செல்லப்பா குலேந்திரன்**
(சாம்சன், குலேந்தி அம்மான்)

வீர ஜனனம்: 1971 - 06 - 25
வீர மரணம்: 1990 - 08 - 27

குலேந்தி உன் கல்லறைக்கும்
கை முளைக்கும் — ஆயுதங்கள்
கை மாறுமே தவிர — உன்
இலட்சியம் மாறப்போவதில்லை
இது உறுதி .....

ஆசிரியர் ரவீந்திரனிற்கும் எமது அஞ்சலிகள்.
வைத்தீஸ்வராவின் வணிக மாணவர்கள்.

(R/699)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தளத்தில் 6-5-71



களத்தில் 25-8-90

**இளம்புலி கியாம்**
**சிதம்பரநாதன் லோகேஸ்வரன் (ஈசன்)**

இனவெறி இராணுவத்தின்
இலக்கினைத் தகர்த் தெறிந்து
ஈழமண் மீட்க வந்த
இளவலே எங்கள் ஈசா

வீரவேங்கையாய் எரிதனை மண்டை தீவில்
திரமுடன் விரட்டிப் போராடும் வேளை
நாற்பத்தொன்பது வேங்கையில் நீயும் ஒருவனாய்
ஆர அணைத்தாய் ஓர் குண்டை ஈழ விடுதலைக்காய்

மரணம் உன் உதடுகளை மூடியது
ஆனால் விடுதலை விடுதலை என்கிற
உன் முழக்கம் இன்றும் கூட
கணீரென்று கேட்கிறது.

தாய், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனி

கொழும்புத்துறை.

(R-704)




## உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் தயாரிப்புகள் மீண்டும் கிடைக்கின்றன.

- மில்க்வைற் நீல சோப் ரூ. 4–00
- அரைக்கட்டி 2–00
- மில்க்வைற் பார் சோப் 24–00
- மில்க்வைற் அரை பார்சோப் 12–00
- சுப்ப மில்க்வைற் ரூ. 9–50
- சலவைப் பவுடர் 50 கிறாம் 3–00
- நீமியா உரம் ஒரு கிலோ 5–00

தங்கள் அபிமானத்திற்கும் ஆதரவிற்கும் நன்றி.

(B.1466)

மில்க்வைற் — யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

*மனிதர் அனைவரும் சமமாகவும் சுதந்திரமாகவும் படைக்கப்பட்டவர்கள்; சமமானபடைப்பிலிருந்து அவர்கள் சில அடிப்படையான, பறிக்க முடியாத உரிமைகளைப் பெறுகின்றனர்.*

*- தாமஸ் ஜெஃப்பர்ஸன்*


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 08-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


# இவர்கள் விட்டாலும் அது விடாது

"இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க அரசாங்கம் தயார். எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும்'' என பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா அண்மையில் தெரிவித்திருந்தார். இதனை சிலநாட்கள் முன் அமைச்சர் தொண்டமானும் தெரிவித்து உள்ளார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அரசாங்கக்கட்சி எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பது இவ்விடயம் ஒன்றில் மட்டுமே.

ஆனால் தமிழருக்கு எதிரான அடக்கு முறைச் சட்டங்களை இக்கட்சிகள் ஆக்கும் போது தனித்தனியாகப் போட்டி போட்டுக் கொண்டே ஆக்கின. ஆனால் அச் சட்டங்களினால் இன்று ஏற்பட்ட அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண ஒருவரைஒருவர் துணைக்கு அழைக்கின்றார்கள். அதாவது தாங்கள் போட்டிபோட்டுக் கொண்டு வளர்த்த இனவாதப் பூதத்திற்கு தாங்களே இரையாகிவிடுவோம் என அஞ்சுகின்றார்கள்.

இதனால் அமைச்சர்களின் கோரிக்கைக்கு எதிர்க்கட்சிகள் ஒருபோதும் ஒத்துழைக்கமாட்டாது என்பதில் சந்தேகம் இல்லை.

அதேவேளை யூ. என். பி. அரசாங்கமும் இனப் பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்றைக் காண்பதில் உளப் பூர்வமான எண்ணம் கொண்டிருக்கவில்லை. இன்றைக்கு அரசாங்கத்திற்கு உள்ள நெருக்கடி நிலையில் இருந்து விடுபடும்வரை ஒருகால அவகாசத்தைப் பெறவே அரசியற் தீர்வு பற்றிக் கதைக்கின்றது.

சிறிலங்கா அரசாங்கம் அரசியற்தீர்வை விரும்புவதாக இருந்தால் இன்று கிழக்கில் கட்டவிழ்த்து விட்டிருக்கும் இனப் படுகொலையை தொடர்ந்து மேற் கொள்ளாது. தமது சொந்த மண்ணில் இருந்த வீடுகளை விட்டு அகதி முகாமிற்குத் தமிழர்களைத் துரத்தியதோடு நிற்காமல் இன்று காடுகளுக்கும் துரத்தியுள்ளது.

அதேவேளை தமிழரின் தாயகத்தை அங்கீகரித்து, தமிழரின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தால் பேச்சுவார்த்தை பற்றி யோசிக்கலாம் என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. ஆகையால்சிறிலங்கா அரசாங்கத்தின் இனப்படுகொலைகள் ஒருபோதும் அரசியற் தீர்விற்கு இட்டுச் செல்லப் போவதில்லை.

இதிலிருந்து தெரிவது சிறிலங்கா அரசாங்கம் தீர்வைப் பற்றிக் கதைப்பதென்பது ஒரு சிறு ஓய்வு, அல்லது இடைவெளி என்பதைப் பெற்றுக்கொள்வதற்காகவே.

1983 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு வடக்கு கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும்-புலிகளுக்கும் இடையில் யுத்தம் நடைபெற்றாலும் கடந்த மூன்றரை மாத யுத்தமே சிறிலங்காவிற்கு தமிழருடனான யுத்தம் இலகுவானதாக இருக்காது என்பதை உணர்த்தியது.

இந்த யுத்தத்தால் சிறிலங்கா பொருளாதாரம் அதலபாதாளத்திற்குச் சென்றது. உள்நாட்டு யுத்தச் செலவீடும், வளைகுடாவில் ஏற்பட்ட நெருக்கடியும் இந்த நிலைக்குக் காரணமாகின.

மேலும், இராணுவத்தினர் யுத்தம் ஆரம்பித்தபோது இருந்த மனோநிலையில் தற்பொழுது இல்லை. தொடர்ச்சியான இழப்புக்கள் அவர்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்தியுள்ளன. அதேவேளைசிறிலங்காவில் ஜே வி.பி. யின் புத்துயிர்ப்பும் அவர்களுக்குக் கவலை ஊட்டுவதாக உள்ளது.

இந்த நிலையில்தான் அரசாங்கம் இன்று அரசியல் தீர்வைப்பற்றிக் கதைக்கின்றது. எதிர்க்கட்சியின் உதவியை கோருகின்றது.

உண்மையாக இல்லாவிடினும், பேச்சிற்கேனும் எவரும் எதிர்பாராதவிதத்தில் ஆளும்கட்சியும், எதிர்க் கட்சியும் அரசியல் தீர்வை விரும்பினாலும், அவர்களால் வளர்த்துவிடப்பட்ட 'இனவாதப் பூதம்' அரசியற் தீர்வை ஏற்றுக்கொள்ளாது என்பதே உண்மை.

# மாலைதீவில் நவம்பரில் சார்க்

(மாலே)

'சார்க்' நாடுகளின் ஐந்தாவது மாநாடு நவம்பர் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை மாலைதீவின் தலைநகர் மாலேயில் நடத்தப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலைதீவில் வெளியுறவு அமைச்சு நடத்திய கூட்டத்தின் முடிவில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த மகாநாட்டில்பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு, நேபாளம், பூட்டான், இந்தியா, இலங்கை, ஆகிய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இதற்கு முன்னதாக இந்த நாடுகளின் வெளியுறவுஅமைச்சர்கள் முற்கூட்டியே கலந்து பேச்சு வார்த்தை நடத்தி மகாநாட்டில் பேசப்படும் களத்துப் பட்டியல் ஒன்றை தயாரிக்கவுள்ளார்.

# உயர் நீதிமன்றத்தின் தலையில்

# பாபர் மசூதி - இராம ஜன்ம பூமி

பாபர்மசூதி - இராமஜன்மபூமி விவகாரம் வி.பி. சிங்கின் சிறுபான்மை அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்லாமிய ஆதிக்கத்தின் ஓர் அம்சமே பாபர் மசூதி என்றும், அயோத்தியில் இராமர் பிறந்த புனித இடத்தின் நினைவை அழிக்கும் முகமாக இஸ்லாமியரால் பாபர் மசூதி கட்டப்பட்டதெனவும் எனவே அந்த மசூதியை உடைத்து அந்த இடத்தில் மீண்டும் இராமர் கோவில் கட்டப்பட வேண்டும் எனவும் இந்து தீவிர வாதிகள் கோரிவருகின்றனர்.

ஆனால் பாபர் மசூதியை உடைப்பது தமது உரிமையை மீறும் செயலாகும் என்று இஸ்லாமியர்கள் வன்மையாக எதிர்க்கின்றனர்.

இந்தியாவில் பத்துக்கோடி மக்களுக்கு மேல் இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர். இது பாகிஸ்தானின் சனத்தொகையைவிடவும் அதிகமாகும். உலகில் இஸ்லாமியர் தொகை கூடிய முதலாவது நாடு இந்தோனேசியா, இரண்டாவது நாடு எகிப்து, மூன்றாவது நாடு இந்தியாவாகும். முறையே நான்காவது பங்களாதேஷும் ஐந்தாவது நாடே பாகிஸ்தான் ஆகும்.

இந்த வகையில் முஸ்லிம்களை அனுசரித்து நடத்த வேண்டிய பொறுப்பு இந்திய அரசுக்கு உண்டு. ஆனால் இந்து தீவிரவாதிகளின் நோக்கம் அதுவல்ல. இந்திய மண்ணுக்கு இடைக்காலத்தில் புகுந்தவர்களே இஸ்லாமியர் என்றும், இவர்கள் இந்து மதத்தை பலாத்காரமாக அழித்தொழிப்பதில் ஈடுபட்டவர்கள் என்றும், இறுதியில் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான், பங்களாதேஷ் எனும் தனியரசுகளை தமக்கென அமைத்துக் கொண்டார்கள் என்றும், அத்துடன் இந்தியாவுக்கு உள்ளிருந்து மேலும் இந்து மதத்திற்கு எதிராகச் செயற்படுவதுடன் இஸ்லாத்தை தொடர்ந்து பெருக்கி வருகிறார்கள் என்றும். அதனைத் தடுத்து, இருக்கும் இந்தியாவையாவது இந்து அரசாக ஆக்க வேண்டும் என்றும் தீவிர இந்துக்கள் கருதுகின்றனர். இந்த வகையில்தான் பாபர் மசூதிப் பிரச்சினையையும் இராம ஜன்ம பூமியில் கோயில்கட்டும் பிரச்சினையையும் தீவிர இந்துக்கள் நோக்குகின்றனர்.

**சாரணன்**

தீவிர இந்துக்களின் நிலைப்பாட்டை மேலும் நோக்குவோம். இஸ்லாத்தின்படி நபிகள் நாயகம் சல் அல்லாகு சல்லம் அவர்கள் அல்லாவின் தூதர். வைஷ்ணவத்தின் படி இராமபிரான் விஷ்ணுவின் அவதாரம். அதாவது இஸ்லாத்தின் படி நபிகள் இறைதூதர், வைஷ்ணவத்தின் படி இறைவனே இராமராக அவதரித்தது. தூதராகிய நபிகளுடன் சம்பந்தப்படும் மக்கா, மதீனா எனும் இடங்கள் இஸ்லாமியர்களின் புனிதஸ்தலங்களாக உள்ளன. அப்படியாயின் இறைவனாகிய இராமபிரானின் பிறந்த இடத்தினை புனிதஸ்தலமாக பேணவிடாது இஸ்லாமியர் ஆக்கிரமித்துள்ளமை நீதியற்றது என்கின்றனர் இந்து தீவிரவாதிகள்.

இதற்கு இந்துக்கள் மத்தியில் கணிசமான அளவு ஆதரவு உண்டு. குறிப்பாக பாரதீய ஜனதாக் கட்சி இராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என்ற கொள்கையை முழுமூச்சாய் கடைப்பிடித்து வருகின்றது.

இந்தியாவில் 10 கோடிக்கு மேல் இஸ்லாமியர் வாழ்கின்றனர். உலகில் 45 இஸ்லாமிய நாடுகள் உள்ளன. எனவே பாபர் மசூதியை உடைத்தால் உள்நாட்டு ரீதியிலும், வெளிநாட்டு ரீதியிலும் இந்தியா பெரும் எதிர்ப்பை இஸ்லாமியர் மத்தியில் சம்பாதிக்க நேரும். அத்துடன் காஷ்மீர் தனிநாட்டுப் போராட்டமும் தீவிரமடையும். மேலும் இந்தியாவின் அயல்நாடுகளாக பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய முஸ்லிம் நாடுகள் உள்ளன. இப்பின்னணியில் காஷ்மீர் போராட்டம் மேலும் தீவிரமடைய வாய்ப்புண்டு. எனவே பாபர் மசூதியை உடைக்காது இப்பிரச்சினையைச் சமாளிக்கவே ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் விரும்புகின்றனர்.

இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது அது போதிய பெரும்பான்மைப் பலத்துடன் இருந்தது. இதனால் காங்கிரஸ் ஆட்சிக் காலம் முழுவதும் இந்து தீவிரவாதிகளை எதிர்த்து சமாளிக்க ஆட்சியாளரால் முடிந்தது.

ஆனால் வி.பி.சிங் அரசாங்கமோ சிறுபான்மை அரசாங்கம். பாரதீய ஜனதாக்கட்சியின் ஆதரவின் தயவில் வி. பி. சிங் அரசாங்கம் உயிர் வாழ்கின்றது. பாரதீய ஜனதாக் கட்சி தனது ஆதரவை விலக்கிக் கொண்டால் வி.பி. சிங் அரசாங்கம் கவிழ்ந்து விடும். பாரதீய ஜனதாக்கட்சியோ பாபர் மசூதியைத் தகர்த்து அதில் இராமருக்கு கோயில் கட்டவேண்டும் என்பதில் தீவிரமாய் நிற்கின்றது.

(தொடரும்)

### இராமர் பிறந்த இடம், பாபர் மசூதி

# பிரச்சினைக்குத் தீர்வு காண பாரதீய ஜனதா வற்புறுத்து

(டில்லி)

இராமர் பிறந்த இடம், பாபர் மசூதி பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்றினை காண உடனடியாக நடவடிக்கைகள் தொடங்குமாறு பாரதீய ஜனதாக்கட்சி, இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கை கேட்டுக் கொண்டு இருக்கிறது.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி மேற்கொள்ளும் ரத சுற்றுலா பற்றி பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் கட்சியின்செயலாளர்கிருஷ்ணலால் சர்மா மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உத்தரப் பிரதேச முதலமைச்சர் மொலயன் சிங் யாதவ் வகுப்பு வாதத்தை தூண்டி விடுவதாக குற்றஞ் சாட்டிய இவர், அவரை இப் பிரச்சினையில் இருந்து விலகி நிற்குமாறு பிரதமர் வி. பி. சிங் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதற்கு முன்னதாக தமது மாநிலத்தின் ஊடாக எல். கே. அத்வானியின் ரத ஊர்வலத்தை செல்ல அனுமதிக்க மாட்டேன் என உத்தரப் பிரதேச முதலமைச்சர் யாதவ் சிங் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இதற்கிடையில் மத்திய உள்துறை அமைச்சர் முக்தி மொகமது செய்யது இப்பிரச்சினைக்கு தீர்வுகாண அனைத்துச் சமயத்தலைவர்களையும் பேச்சு நடத்த அழைத்திருக்கிறார்.

குறிப்பாக, காஞ்சிப் பெரியவர் சங்கராச்சாரியாரையும் லக்னோ முஸ்லீம் மத மௌலானா அப்துல் ஹசன் அலிக்கும் இவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# பங்களாதேஷில் வெள்ளம்; பதினைந்து பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் தொடர்ந்து பெய்யும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் குறைந்தது 15 பேர் உயிர் இழந்துள்ளதாகவும், 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த ஐந்து நாட்களாக பெய்யும் மழையினால் நதிப் பெருக்கு ஏற்பட்டு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. 1000 ஏக்கர் நிலம் நீரில் மூழ்கியுள்ளதாகவும், 15,000 வீடுகள் அழிந்துள்ளதாகவும் பங்களாதேஷ் புனர்நிவாரண அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வெள்ள நிவாரண நடவடிக்கைகளை உடன் தொடங்கிய பங்களாதேஷ் அரசாங்கம் சர்வதேசரீதியில் உதவியினை கோரியுள்ளது.

### சைக்கிள் திருடன் பிடிபட்டான்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு செங்குந்தா பாடசாலை வீதியில் ஒரு வீட்டில் கடந்த வெள்ளிக்கிழமை வீட்டிலுள்ளோர் முன் அறையில் கதைத்துக் கொண்டிருந்த வேளை 35 வயது மதிக்கத் தக்க திருடன் ஒருவன் முன்னால் நின்றிருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டோடிய சமயம் உரிமையாளரால் துரத்திப் பிடிக்கப்பட்டான்.

மேற்படி திருடனை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

# இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இலங்கை சாதகமாக பயன்படுத்திக்கொண்டது

## இந்தியச் செய்தியாளர் கருத்து

(டில்லி)

இந்தியாவும், இலங்கையும் 1987ஆம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தை இலங்கை அரசு தன்னுடைய வலிமைக்கு முறுக்கேற்றிக்கொள்ளும் அளவிற்கே பயன்படுத்திக்கொண்டது என அகில இந்திய வானொலி நிருபர் சறுப்புசாமி ''இலங்கையின் இனச்சிக்கல்'' என்ற தலைப்பில் எழுதிய கண்ணோட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சுயநலத்தோடு இலங்கை அரசு செயற்பட்டதாலேயே இலங்கையின் இனப்பிரச்சினையானது கூர்மையடைந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக வடக்குக் கிழக்கு இணைப்பை தமிழீழ விடுதலைப்புலிகள் கோரியிருந்தனர். ஆனால் ஆளும்கட்சியும், பிரதான முஸ்லிம் கட்சியினரும் இந்த இணைப்பை மூர்க்கமாக எதிர்த்து வந்தனர்.

ஆளும்கட்சியும், எதிர்க்கட்சிகளும் இலங்கை ஒருமைப்பாட்டைக் கருத்திற்கொண்டு ஒன்றிணைந்து நடவாது இவ்வாறு நடப்பார்களேயானால் பிரச்சினை கூர்மையடையும் என்று அவர் கூறினார்.

இவ்வாறு இலங்கை அரசு பிடிவாதம் காட்டியதாலேயே விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையினை கூர்மையாக்கியுள்ள தாக்கிய அதேவேளை தமது கொள்கையில் பிடிவாதமாகவும் உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் பெரும்பான்மையாக தமிழர்கள் வாழும் கிழக்குப்பகுதியில் பாதுகாப்புக்கென ஆயுதம் வழங்கி ஊர்காவற்படையில் சேர்த்துக்கொள்கின்றனர். இதுவும் இனச்சிக்கலுக்கு ஒரு முக்கிய காரணமாகும் என்று குறிப்பிட்டார்.

இவ்வாறான பொதுவான அமைப்புக்கள் நடுவுநிலைமையுடன் செயற்படவேண்டும். ஆனால் பல்வேறு உள்நோக்கங்களைக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் இந்த ஊர்காவற் படையினரால் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் இப்போது இந்து - முஸ்லிம் கலவரம் மிகக்கடுமையான அளவிற்குத் தலை தூக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவேமொத்தமாகப்பார்க்கும்போது இலங்கை அரசாங்கத்தின் அலட்சியத்தினால் இப்போது முன்பு எப்போதையும் விட இலங்கையில் வடக்கு கிழக்கில் இருந்து முஸ்லிம் கலவரம் வளர்ந்து காணப்படுகிறது என்றும் அவர் தனது கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளார்.

## மூளைக்காய்ச்சல்; குடும்பஸ்தர் பலி

மூளைக்காய்ச்சல்நோயினால் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார். மானிப்பாய் போதனா மருத்துவமனைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த முருங்கனைச் சேர்ந்த பெனடிக்ற் (வயது31) என்பவரே நேற்று மரணமடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வீதியால் சென்றுகொண்டிருந்தபோது மயக்கமடைந்ததாகவும், அவருக்கு இந்த நோய் ஏற்கனவே இருந்தபோதிலும் உரியவேளையில் சிகிச்சை பெறாமையினாலேயே இறந்ததாகவும் தெரிகிறது. (க)

## இரண்டாம் கட்ட உணவு விநியோகத்திற்குத் தடை

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் இரண்டாம் கட்ட இலவச உலர் உணவு விநியோகம் செய்யக்கூடாது என யாழ். உதவி அரசாங்க அதிபர் தடுத்துள்ளார்.

இந்தப் பொருட்கள் மக்களுக்கு நல்ல முறையில் விநியோகம் செய்யப்படவேண்டுமென்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (24)

## கைதடி மேற்கு ப. நோ. கூ. சங்கத்தில் மோசடி கண்டுபிடிப்பு

கைதடி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த மாதம் 16ஆம் திகதி நடந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிப் பொறுப்பாளர் கே பாப்பா தெரிவித்துள்ளார்

மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பொதுமக்களின் நிவாரணப் பொருட்களான வெள்ளைப்பச்சை அரிசியும், மாவும் பிரதம சங்கத்தில் இருந்து கிளை இலக்கம் 4 இன் மூலம் திட்டமிட்டு கடத்தப்பட்டது என்பது ஆதார பூர்வமாக நிரூபணமாகி உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மோசடிக்கு உடந்தையாக இருந்த சங்கத்தின் கொள்வனவு உத்தியோகத்தருக்கு 50.000 ரூபாவும், கிளை முகாமையாளர்களுக்கு தலா 3000, 1000 ரூபா, 5.000 ரூபா என்ற விகிதத்திலும் தண்டம் விதிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் கூட்டம் நடத்தப்பட்ட பின்பும் இப்படியான திட்டமிட்ட மோசடி நடந்ததை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றும் பாப்பா தெரிவித்தார்.

### பிறீமாத்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் தொழிலாளர்கள் பீதியினால் தொழிலுக்குச் செல்லாமல், இடம்பெயர்ந்து சென்றதையடுத்து, அந்தத் தமிழர்களின் இடத்திற்கு சிங்களவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

தற்போது அத்தொழிற்சாலையில் 1400 சிங்களவர்களும், 100 தமிழர்களுமே தொழில் புரிந்து வருகின்றார்கள். (36)

### பிறப்புப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசினர் வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளின் பிறப்புப்பதிவுகளையும் இங்கு பதிவுசெய்யலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

பதிவுபதிந்து இருகிழமைகளில் இலவசமாக வழங்கப்படும் பிரதியை இங்கு நேரில் சென்றுபெற்றுக்கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

### போர்க்காலகல்வி அபிவிருத்தி பற்றி கருத்தரங்கு

இடம்: யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
காலம்: 09-10-90 செவ்வாய்க்கிழமை மு. ப. 10 மணி
விடயம்: கோட்டக்கல்வி அதிகாரி, கல்வி அதிகாரிகள் கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், சிற்றூர் அவைகளின் தலைவர்கள், செயலாளர்கள், சகல அகதிமுகாம் பொறுப்பாளர்கள் ஆகியோர் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

வட்ட அவை,
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
தென்மராட்சி. (B/1476)

### தமிழ்நாட்டு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றிக் குறிப்பிடுகையில், தமிழ் இனத்தை அழிக்கப் புறப்பட்டுள்ள சிறிலங்கா இராணுவம், பொலீஸ் ஆகியவற்றிற்கெதிராக விடுதலைப் புலிகள் வீராவேசத்துடன் போராடி வருகின்றனர். கடந்த இரு மாத காலமாக தீரமுடன் போராடி வருகின்றனர்.

சிறிலங்கா அரசை எதிர்த்து மிகப்பெரிய போரில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டால் இலங்கைத் தமிழினம் முழுவதுமே அழிக்கப்பட்டுவிடும். விடுதலைப் புலிகளுக்கு கிடைக்கும்வெற்றி இலங்கைத் தமிழருக்கே கிடைக்கும்வெற்றியாகும். அவர்களுக்கு உதவும் விதத்தில் எந்தவிதமான உதவிகளையும் தமிழக முதலமைச்சர் மேற்கொள்ளாமல் தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இந்த நிலையில் வி. பி. சிங் வேறு விதமாகச் செயற்படுவார் என்று எதிர்பார்க்க முடியாது. தற்போது உள்ள மாறுபட்ட சூழ்நிலையில் தமிழ் நாட்டு மக்களுக்குள்ள ஒரே வழி விடுதலைப் புலிகளை ஆதரிப்பது தான். முதல்வரும் அவருக்குள்ள அதிகாரங்களுக்கு உட்பட்டு அவர்களுக்கு உதவமுன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

### திருமலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில் இந்த இடித்து நொருக்கப்பட்ட கடைகள், வீடுகளை அகற்றிய பின்பு, புதிய கட்டடங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சில பகுதிகளில் சீமேந்துப் பைகளும், கொங்கிறீற் கற்களும் பல வாகனங்களில் கொண்டுவந்து பறிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த ஏற்பாடுகள் பல புதிய விகாரைகள் அமைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கலாம் என அங்குள்ள சக தமிழ் அதிகாரிகள் கருதுவதாகவும் அவர் கூறினார்.

### தாயகத்தை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கம் காணப்படுமாயின் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காணப்படும் வாய்ப்பு உள்ளது என இந்தியப் பத்திரிகைக்கு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அளித்த பேட்டியைமேற்கோள்காட்டியுள்ள இந்தியத் தூதுவர், தமிழீழ விடுதலைபபுலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு கோரியுள்ளார்.

### கரம்பனில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்த பலரைக் கைது செய்து தம்முடன் அழைத்துச் சென்றுள்ளனர். மேலும் இந்தப் பகுதியில் வீதிகளிலும் வீட்டு வளவுகளிலும் இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளிலும் மிதி வெடிகளிலும் சிக்கி ஏராளமான கால் நடைகள் உயிரிழந்து வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (22)

## சாகமத்தில் மிதிவெடி; படைகள் கால்கள் இழப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சாகமம் என்ற இடத்தில் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கிய சில இராணுவத்தினர் தமது கால்களை இழந்துள்ளனர்.

கடந்த திங்கள் இப்பகுதிக்கு ரோந்து வந்த போதே இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கிக் கொண்டனர். (க)

## தபால் சேகரிப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள், தினசரி தமக்கு அருகாமையில் உள்ள தபால் பெட்டிகளில் 4ஆம் திகதி வியாழக்கிழமை முதல் தங்கள தபால்களைச்சேர்க்கலாம் என்று யாழ். அத்தியட்சகர் திரு. க. பரராசசிங்கம் தெரிவித்துள்ளார். (24)

### ஊர்காவற்றுறை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையும், வெள்ளிக்கிழமை தம்பாட்டி, ஊர்காவற்துறை பகுதிகளில் 121 மிதிவெடிகளையும், நேற்று தம்பாட்டியில் மேலும் 174 மிதிவெடிகளையும் விடுதலைப் புலிகள் மீட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களில் இம் மிதிவெடிகளில் சிக்கிய பொதுமக்கள் பலர் கால்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

### அகதிகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படகினுள் புகுந்ததால் மூழ்கிப் போனதாகவும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

இச் சடலங்கள் அனைத்தும் அடையாளம் காணப்பட்டு அடக்கம் செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

### மன்னாரில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு வாகனங்களில் இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்த போது விடுதலைப் புலிகளின் கண்ணி வெடி ஒன்றில் சிக்கிய இராணுவ வாகனம் தூக்கி வீசப்பட்டது. இச்சம்பவத்தில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சரியாகத்தெரியவரவில்லை. (க)

### பதின்மூன்றாம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கி-1, இரவைக்கூடு 10, வாக்கிடோக்கி 1, இரவைகள் 226 போன்ற ஆயுதங்களை மீட்டனர். இந்த வீடு கடந்த காலங்களில் தடைசெய்யப்பட்ட குழுக்களால் பாவிக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. (க)

### இராணுவ

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும் அதன்பின் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களாலும் ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து எமது பாடசாலைக்குஐம்பத்தொன்பது லட்சம் ரூபா செலவு செய்து திருத்தவேலைகள் செய்யப்பட்டன.

இப்பொழுது மீண்டும் சிறிலங்கா அரசின் ஷெல் வீச்சு, குண்டு வீச்சு, கடல் பீரங்கித் தாக்குதல்களால் எமது பாடசாலையின் பெரும்பாலான கட்டடங்கள் சேதமுற்று அழிந்துபோயுள்ளன. குறிப்பாக தம்பர் மண்டபம், பழம்பெரும் ஆர். சி. மண்டபம் ஆகியனவும் எமது பாடசாலையின் நூலக கட்டடமும் முற்றாக அழிந்து போய் விட்ட நிலையில் உள்ளன. நூலகத்திலிருந்த ஏராளமான விலைமதிக்கமுடியாத புத்தகங்கள் சிதைந்து போய் உள்ளன எனவும் அவர் கூறினார்.

இனிமேல் எமதுபாடசாலை மாணவர்களுக்கு வகுப்புகளை ஆரம்பிப்பதாயின் உடனடியாக எமது பாடசாலை சுத்திகரிக்கப் படவேண்டும், சுத்திகரிக்கப்பட்ட பின் கீழ் மாடி கட்டடங்களில் சிலவகுப்புகளை உடன் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் அதிபர் மேலும் கூறினார். (லோ)

## மரண அறிவித்தல்

### திரு. முத்தர் கந்தையா

நவக்கிரியைச் சேர்ந்த திரு முத்தர் கந்தையா 7-10-90 அன்று காலமாகிவிட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், அருணகிரி, வினாயகமூர்த்தி (பிரான்ஸ்), சிவஞானம் (ஜேர்மன்), புகனேந்திரன் (பிரான்ஸ்), சிவபாதசுந்தரம் வேல்வதி (கனகராயன் குளம்), மாணிக்கவாசகர் நற்குணம் (ஜேர்மன்), சூலேந்திரம், தனலட்சுமி (சுவிற்சலாந்து), செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று நண்பகல் 12 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக நிலாவரை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்;
க. செல்வராணி (மகள்)

R/712

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.